தேசிய கல்லூரியில் அறிவியல் திருவிழா



திருச்சி தேசிய கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் பங்கேற்ற பள்ளி மாணவர்கள்.

திருச்சி, ஆக. 21: திருச்சி தேசிய கல்லூரியில் மாணவர்களின் அறிவியல் திறமைகளை வெளிப்படுத்தும் 2 நாள் அறிவியல் திருவிழா வெள்ளிக்கிழமை தொடங்கியது.

தேசிய கல்லூரி செயலர் கே. ரகுநாதன் வழிகாட்டுதலின் படி, கல்லூரி முதல்வர் டி. பிரசன்ன பாலாஜி தலைமையில் அறிவியல் திருவிழாவின் தொடக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்பாக்கம் அணு ஆராய்ச்சி நிலைய முன்னாள் இயக்குநரும், அணு விஞ்ஞானியுமான பி. வெங்கட்ராமன் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசியதாவது:

அணுவும், அறிவியலும் ஆக்க சக்திதான். அவற்றை சரியான வழியில் பயன்படுத்தினால் நல்வாழ்வுக்கு வழி கிடைக்கும். அணுசக்தி துறையில் பணியாற்றினால் கதிர்வீச்சு அபாயம் ஏற்படும் என்பது தவறான வாதமாகும். சென்னை கல்பாக்கம் அணுமின்சக்தி நிலையத்தில் பணிபுரியும் 2 ஆயிரம் பேரில் 40 சதவீதம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டில் உள்ள கனிம வளங்களை பயன்படுத்தி பொருளாதார உயர்நிலை அடைய வேண்டும்.

விஞ்ஞானிகள் சாராபாய், பாபா ஆகியோரின் சிறந்த பணியால் விண்வெளித் துறையில் இந்தியா சிறந்து விளங்குகிறது. அனைத்துத் துறைகளிலும் இந்திய விஞ்ஞானிகளின் சிறப்பான செயல்பாடுகளால் இந்திய அறிவியல் துறை வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இந்த அறிவியல் திருவிழாவை தங்களது திறமைகளை வெளிக்கொணரும் மேடையாக மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். செயற்கை நுண்ணறிவு, ட்ரோன் தொழில்நுட்பத்தை மாணவர்கள் பயன்படுத்தி புதிய கண்டுபிடிப்புகளை கண்டறிய வேண்டும் என்றார்.

நிகழ்வில் திருச்சி மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு டிஎஸ்பி டி.கே. லில்லிகிரேஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சனிக்கிழமை நிறைவுபெறும் இந்த அறிவியல் கண்காட்சியை திருச்சி மாவட்டத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவ, மாணவிகள் அறிவியல் கண்காட்சியைப் பார்த்து ரசித்தனர்.

மாவட்டத்தில் 13 பாசன வாய்க்கால்களுக்கு முறைவைத்து தண்ணீர் திறக்கப்படும்

நீர்வளத் துறை அதிகாரிகள் உறுதி



திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பேசிய ஆட்சியர் பிரத்திக் தாயள். உடன் அலுவலர்கள்.

திருச்சி, ஆக.21: திருச்சி மாவட்டத்தில் உள்ள 13 பாசன வாய்க்கால்களுக்கு முறை வைத்து தண்ணீர் தர நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது.

திருச்சி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு, ஆட்சியர் பிரத்திக்தாயள் தலைமை வகித்தார். கூட்டத்தில், விவசாயிகள் சங்கத் தலைவர்கள் பேசியது:

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பொ. அய்யாக்கண்ணு: முசிறி பகுதியில் 1 லட்சம் தென்னை மரங்கள் காய்ந்துள்ளன. விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு கோட்டாட்சியர்கள் வருவதில்லை. ஆட்சியரகத்தில் நடைபெறும் குறைதீர் கூட்டத்துக்கு வரும் விவசாயிகளை பாதுகாப்புப் பணியில் உள்ள போலீஸார் தடுக்கின்றனர் என புகார் தெரிவித்தார்.

அப்போது, ஆட்சியர் குறுக்கிட்டு, நான் இருக்கிறேன், என்னிடம் குறைகளை கூறுங்கள் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்தக் கூட்டத்தில் விவசாயிகளை போலீஸார் தடுக்க மாட்டார்கள் என்றார்.

தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த அய்யாக்கண்ணுவை பேச்சை நிறுத்தும்படி ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயராணி, மணியோசை எழுப்பி அறிவுறுத்தினார். இதையடுத்து, இருவருக்கும் இடையே சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர், ஆட்சியர் தலையிட்டு அதை தடுத்தார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் அயிலை சிவசூரியன்: மாவட்டத்தில் உள்ள 13 பாசன கிளை கால்வாய்களுக்கு தண்ணீர் திறப்பது தொடர்பான கடந்த வாரம் அளித்த கோரிக்கைக்கு எந்த நடவடிக்கையும் எடுக்காததை கண்டித்து வெளிநடப்பு செய்து காத்திருப்புப் போராட்டம் நடத்த உள்ளோம் என்றார்.

அப்போது நீர்வளத் துறை அதிகாரிகள் குறுக்கிட்டு, இந்த வாரம் 13 கிளை கால்வாய்களுக்கும் முறை வைத்து நீர் திறக்கப்படும் என உறுதியளித்தனர்.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பூ.விசுவநாதன்: சம்பா சாகுபடிக்கு 70 டிஎம்சி தண்ணீர் பெற முதல்வர் , உச்சநீதிமன்றத்துக்கும், காவிரி மேலாண்மை ஆணையத்துக்கும், காவிரி நீர் பங்கீடு ஒழுங்காற்று குழுவுக்கும் அழுத்தம் தர வேண்டும்.

நீர்வளத் துறை கட்டுப்பாட்டில் உள்ள 190 ஏரி, குளங்கள், ஊரக வளர்ச்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள 1,300 ஏரி குளங்களை தூர் வாரி புனரமைக்க வேண்டும்.

தமிழ்நாடு வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரக விழிப்புணர்வு இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பி.தர்மராஜ்: கம்பரசம் பேட்டை பகுதியில் கோயில் நிலத்தில் குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு பிரதமரின் உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைமடை பாசன விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர் செல்வராஜ்: சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் 5 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விட வேண்டும். குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடாததால் திருச்சி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நஷ்ட ஈடு பெற்றுத்தர வேண்டும். கொண்டையம் பேட்டையில் காவிரி நாட்டு வாய்க்காலை தூர் வார வேண்டும்.

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்க இணைச் செயலர் கவுண்டம்பட்டி சுப்பிரமணியன்: மேக்கேதாட்டுவில் அணை கட்டக்கூடாது. அங்கு அணைக் கட்டினால் தமிழ்நாடு பாலைவனமாகும். எனவே, முதல்வர், பிரதமர் இணைந்து அணைக் கட்டுவதை தடுக்க வேண்டும்.

தமிழக விவசாயிகள் சங்கம் மாவட்டத் தலைவர் ம.ப.சின்னதுரை கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியபோது, தனக்கான (5 நிமிஷங்கள்) நேரத்தை கடந்து பேசியதால் மணி அடிக்கப்பட்டது. மற்ற விவசாயிகள் அதிக நேரம் பேசுகின்றனர். நான் பேசும் போது மட்டும் குறைவான நேரம் தரப்படுகிறது.

எனவே, நான் இன்றைய கூட்டத்தில் பேசமாட்டேன் எனக் கூறி அமர்ந்தார். தொடர்ந்து விவசாயிகள் பலர் கோரிக்கை மனுக்களை ஆட்சியரிடம் வழங்கினர்.

இக் கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் எம்.சாந்தாமணி, துணை இயக்குநர் (தோட்டக்கலை) சரண்யா, வேளாண் பொறியியல் செயற் பொறியாளர் சிவகுமார் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கொலை வழக்கில் தொடர்புடையவர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது

திருச்சி, ஆக. 21: புத்தனாம்பட்டி கொலை வழக்கில் தொடர்புடையவரை போலீஸார் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

திருச்சி மாவட்டம், துறையூர் கோட்டாத்தூர் திருவள்ளுவர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் ச. கணல் (19). இவர் கடந்த 19.07.2026 அன்று தனது சகோதரர் கவின் (17), அவரது நண்பர் ஹரித் (17) ஆகியோருடன் இருசக்கர வாகனத்தில் புத்தனாம்பட்டிக்கு பெட்ரோல் போடுவதற்காக சென்றுள்ளார்.

அப்போது, அங்கு இருசக்கர வாகனங்களுடன் நின்றுகொண்டிருந்த சரித்தர பதிவேடு ரௌடியான அழகியமணவாளம் கீழத்தெருவைச் சேர்ந்த வே. விமல்ராஜ் (21), அவரது நண்பர் தீனா உள்ளிட்டோர் கணலின் வாகனத்தை வழிமறித்து சரமாரியாகத் தாக்கினர். இதில் படுகாயமடைந்த கணல் சிகிச்சை பலனின்றி 25.07.2026 அன்று உயிரிழந்தார்.

இதுகுறித்து புலிவலம் போலீஸார் வழக்குப் பதிந்து, விமல்ராஜ் உள்ளிட்டோரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவர் தொடர்ந்து பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதால், திருச்சி மாவட்ட எஸ்.பி. டோங்கரே பிரவீன் உமேஷின் பரிந்துரையின் பேரில், திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரத்திக் தாயள், ரௌடி விமல்ராஜை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க வெள்ளிக்கிழமை ஆணை பிறப்பித்தார்.

குண்டர் தடுப்புச் சட்டத்தில் இதுவரை 66 பேர் கைது: திருச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் தற்போது வரை மொத்தம் 66 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் தகவல் தெரிவித்துள்ளது.

ரயில்வே பேரிடர் மேலாண்மை ஒத்திகை



திருச்சி சரக்கு ரயில் முனையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ரயில்வே பேரிடர் மேலாண்மை ஒத்திகையில் ஈடுபட்டோர்.

திருச்சி, ஆக. 21: திருச்சி ரயில்வே கோட்டம் சார்பில் பேரிடர் மேலாண்மை ஒத்திகை திருச்சி சரக்கு ரயில் முனையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வுக்கு திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் பாலக்ராம் நெகி தலைமை வகித்தார். கூடுதல் கோட்ட மேலாளர் கே.எம். சத்யரதன், மூத்த கோட்டப் பாதுகாப்பு அதிகாரி எஸ். மகேஷ் குமாருடன் இணைந்து நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

இதில், அரக்கோணம் பேரிடர் மீட்புப் படையினர் 4-ஆவது பட்டாலியன், தீயணைப்புத் துறை, ரயில்வே பாதுகாப்புப்படை,ரயில்வே காவல் படை, செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ், சாரண-சாரணியர் இயக்கம், ரயில்வேயின் பல்வேறு துறைகள் ஆகியவற்றுடன் ரயில்வே ஊழியர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

ஒத்திகையில், ஒரு பெரிய ரயில் விபத்து நிகழ்ந்து, அதில் 3 ரயில் பெட்டிகள் தடம் புரண்டு, புகை மற்றும் தீ விபத்து ஏற்பட்டது போல சித்தரிக்கப்பட்டது. அப்போது, அவசரகால ஏற்பாடுகளைச் செய்தல், மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ உதவிகள் செய்தல், தீயணைப்பு நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுத்தல், மருத்துவ முன்னுரிமை, பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுதல் மற்றும் சீரமைப்புப் பணிகள் ஆகியவை ஒத்திகையில் மேற்கொள்ளப்பட்டன.

இதனை தெற்கு ரயில்வேயின் முதன்மைத் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி லலித் குமார் மன்சுகானி தலைமையிலான 2 துணைத் தலைமைப் பாதுகாப்பு அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். காலை 8.22-க்குத் தொடங்கிய ஒத்திகை நிகழ்ச்சியானது 10.15 மணிக்கு நிறைவடைந்தது. இதன் பிறகு நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், ஒத்திகையில் பங்கேற்றவர்கள் கலந்து கொண்டனர். இதில், ஒத்திகையின் நிறை, குறைகள் ஆய்வு செய்யப்பட்டு, உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

ரயில் விபத்துச் சூழல்களில் பேரிடர் மீட்பை மேம்படுத்தவும், மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் இந்த ஒத்திகை நிகழ்ச்சி உதவும் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொட்டியத்தில் விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டம்

ஒருவர் தீக்குளிக்க முயற்சி

முசிறி, ஆக.21: திருச்சி மாவட்டம், தொட்டியம் வடகரை வாய்க்கால் என்.பி. சியில் விவசாயத்துக்கு தண்ணீர் திறந்து விடாததால் வாழை, வெற்றிலை காய்ந்து சேதமடைவதாக கூறி விவசாயிகள் சங்கத்தினர் தொட்டியம் வட்டாட்சியரகம் முன்பு வெள்ளிக்கிழமை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாய சங்க தலைவர் மருதப்பிள்ளை தலைமையில் செயலர் மயில்வாகனன், வெற்றிலை விவசாய சங்க தலைவர் தியாகராஜன் பிள்ளை, இணைச் செயலர் மணிகுட்டிஐயர், மற்றும் தொட்டியம் வட்ட அனைத்து வணிகர்கள் சங்கம் தொட்டியம் வட்ட அனைத்து விவசாயிகள் முன்னிலையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

இதில், சில தினங்களுக்கு முன்பாக வடகரை பாசன வாய்க்காலில் குடிநீருக்காக தண்ணீர் திறக்கப்பட்டதாகவும், தற்பொழுது வாய்க்காலில் தண்ணீரை அடைத்ததால் விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்கப்பெறவில்லை என கூறி தொட்டியம் வட்டாட்சியரகம் முன்பாக 200-க்கும் மேற்பட்டோர் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது மேலசீனிவாசநல்லூரைச் சேர்ந்த சங்கர் என்ற விவசாயி, திடீரென தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட முயற்சித்தார். அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் அவர் மீது தண்ணீர் ஊற்றி அசம்பாவிதம் நடக்காத வகையில் தடுத்தனர்.

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda

பிராந்திய சொத்து மீட்பு கிளை (ROSARB)
2வது தளம், பிராந்திய அலுவலக வளாகம், 82, வங்கி சாலை, கோயம்புத்தூர்
போன்: 9790247824

கடன் பெற்றவருக்கு வழங்கப்படும் அறிவிக்கை

(2002-ஆம் ஆண்டின் நிதிசார்ந்த சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன்களை அமலாக்குவதற்கான சட்டத்தின் பிரிவு 13(2)-ன் உட்பிரிவு (2)-ன் கீழ்)

1) M/s. **வேலை டிரஸ்ட்ஸ் மற்றும் பைப்ஸ் (கடன்தாரர்)**, எண்.215,216, பவானி மெயின் ரோடு, பவானி, ஈரோடு மாவட்டம்-638301 2) **திருமதி CV ரேணுகாதேவி** (உரிமையாளர்) M/s.**வேலை டிரஸ்ட்ஸ் மற்றும் பைப்ஸ்)**, எண்.67, பாலன் நகர், கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்-641030, 3) **திரு. CR கந்தராஜ்**, (M/s. **வேலை டிரஸ்ட்ஸ் மற்றும் பைப்ஸ்-ன் ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்**) த/பெ. ராமசாமி எண்.67, பாலன் நகர், கவுண்டம்பாளையம், கோவை-641030, 4) **திரு. கதிஸ் குமார் KM** (M/s. **வேலை டிரஸ்ட்ஸ் மற்றும் பைப்ஸ்-ன் ஜாமீன்தாரர்**) த/பெ. கருமாரன் T, எண்.17, அன்னை அமிர்தா அபார்ட்மெண்ட், KNG புதூர் பிரிவு, தடாகம் சாலை, கோயம்புத்தூர்-641025 5) **திருமதி. V. வைஜந்தி** (M/s. **வேலை டிரஸ்ட்ஸ் மற்றும் பைப்ஸ்-ன் ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்**) க/பெ. வரதராஜ், எண்.1/139, நடுத்தெரு, திருப்பத்தூர், திருச்சி மாவட்டம்-621106.

பொருள்: எமது பாங்க் ஆஃப் பரோடா, RS பழம் கிளையில் பெற்றிருந்த கடன் வசதி - தொடர்பாக

1) எமது கடித எண். BOB/ADV/CC/MSME/20-21 தேதி **03.08.2020**, தேதிய ஒப்புதல் கடிதமும் தங்களுக்கு வழங்கப்படுவதற்கான கடன் வசதிக்கான ஒப்புதலும் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் வசதியை தாங்கள் பெற்றுக் கொண்டு, பின்னர் குறிப்பிடப்படும் வகையில் அதற்கான பிணையை வழங்கிய பிறகு, இந்தக் கடன் வசதிகளை பயன்படுத்தத் தொடங்கினீர்கள். மேற்கூறிய கடன்/ரொக்கக் கடன் வசதியில் நற்பொதைய நிலுவைத் தொகை மற்றும் இத்தகைய பொறுப்புக்காக உருவாக்கப்பட்டுள்ள பிணைக்கான வட்டித் தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வ எண்	பெற்றுள்ள கடன் வசதியின் வகை மற்றும் நன்மை	அளவு (ரூபாய்களில்)	வட்டி விகிதம்	26.02.2025 தேதிய நிலவரப்படி நிலுவைத் தொகை 28.03.2025 வரையிலான வட்டியுடன் சேர்த்து	பிணைகளின் கருக்கமான விவரங்களுடன் கூடிய பிணை ஒப்பந்தம்
1	ரொக்கக் கடன் (A/c No. 71810500000026)	ரூ 70,00,000/-	10%	ரூ. 48,89,887.29 + வட்டி	1) Hypothecation of stocks and book debts 2) Mortgage of properties as detailed below.
	மொத்தம்	ரூ.70,00,000		ரூ. 48,89,887.29 + வட்டி	

பிணைகளின் கருக்கமான விவரங்களுடன் கூடிய பிணை ஒப்பந்தம்

அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரப்பட்டியல் : சொத்து I : கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தாலுக்கா, பெரியநாயக்கன்பாளையம் சார்-பதிவாளர் மாவட்டம், துடியலூர் கிராமம், SF எண்கள் 91/B, 91/2B, 92/2B, 84, 85, 86 மற்றும் 87 ன் "வளர்மதி கூட்டுறவு நகர்" மனை பிரிவின் மனை எண் 120-ன் எல்லைகள்: கிழக்கு: 7 மீட்டர் அகல வடக்கு-தெற்கு சாலை, மேற்கு: மனை எண்கள் 111 மற்றும் 112, வடக்கு: மனை எண் 119, தெற்கு: மனை எண் 121. அளவுகளில்: வடக்கு-தெற்கு திருபுறமும் 30 அடி, கிழக்கு-மேற்காக இருபுறமும் 60 அடி. ஆக மொத்தம் 1800 சதுர அடி அல்லது 4 சென்ட் 66 சதுர அடி கொண்ட காலி மனை அதனுடன் எதிர்காலத்தில் கட்டப்படவுள்ள கட்டுமானத்திற்கு செல்வதற்கான மனை பிரிவின் சாலைகள் மற்றும் இதர பயன்பாட்டு உரிமைகள் உள்ள வகையில் கொண்ட இச்சொத்து CR கந்தராஜ் பெயரில் உள்ளது.

சொத்து II: திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் பதிவு மாவட்டம், செட்டிகுளம் சார்-பதிவு மாவட்டம், மணச்சநல்லூர் தாலுக்கா, திருப்பத்தூர் கிராமம், நத்தம் சர்வே எண் 131/1, வட்டம் எண் 3, துறையூர் - ஏழுமலை பிருதான சாலையில் உள்ள சொத்தின் நான்கு எல்லைகள்: **கிழக்கு:** நடுத்தெருவில் உள்ள வடுகநாதர் வீடு. மேற்கு: ராமலிங்க ரெட்டியார் பெயரில் உள்ள வீடு; **வடக்கு: கிழக்கு-மேற்கு சாலை; தெற்கு:** ஜெயந்தி பெயரில் உள்ள இதர சொத்துகள். 147 சதுர மீட்டர் அளவுள்ள சொத்து. அதனுடன் வழக்கமான வழிப்பாதைகள் மற்றும் உரிமைகள் கொண்ட சொத்து. இந்த சொத்தின் புதிய நத்தம் சர்வே எண் 442/3 திருமுதி V ஜெயந்தி பெயரில் உள்ள சொத்தின் கதவு எண்கள் 1/143 மற்றும் 1/139.

2. 25-11-2025 தேதியிட்ட கடன் ஒப்புதல் கடிதங்களில், 24-11-2025 தேதியுடன் வலியுறுத்தப்பட்டுள்ள நிலுவைத் தொகையானது, கூடுதல் பணப் பயன்பாடுகள் மற்றும் 28.03.2025 வரையிலான வட்டி ஆகியவற்றை உள்ளடக்கியது. வணக்குகளில் மற்று வைக்கப்பட்டுள்ள நிதி கட்டணங்கள் ஏதுமில்லை.

3. உங்களுக்குத் தெரிந்ததுபோல, 31-03-2025-ல் முடிவடைந்த காலாண்டுக்கான மேற்கூறிய கடன்கள்/நிலுவைத் தொகைகள் மீதான நலன்களைச் செலுத்துவதில் நீங்கள் தவறியுள்ளீர்கள். மேலும், 31-12-2024 மற்றும் அதற்குப் பிறகு செலுத்த வேண்டிய காலக் கடன் (term loan) / தேவைக்கேற்ற கடன் (demand loan) ஆகியவற்றின் தவணைகளைச் செலுத்துவதிலும் நீங்கள் தவறியுள்ளீர்கள்.

4. மேற்குறிப்பிட்ட வகையில் நீங்கள் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தத் தவறியில் இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி **30.03.2026** அன்றைய நிலவரப்படி உங்களது கடன் கணக்குகள் செயல்படாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து தாங்கள் இது பற்றிய கோரிக்கைகளையும் வேண்டுதல்களையும் விடுத்த போதிலும் தொகையை செலுத்த வேண்டிய காலம் கடந்த போதிலும் பெற்ற கடன்களையும் அதன் மீதான வட்டையும் நீங்கள் செலுத்தவில்லை.

5. மேற்கூறிய முதல் பாராவில் குறிப்பிடப்பட்டதற்கு கடன் வசதிகளை பெற்றதன் அடிப்படையில் உங்களது பொறுப்புகளை நிறைவேற்ற தவறியது மட்டுமின்றி மற்றும் உங்கள் கணக்காளது செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, நாங்கள் 2002 ஆம் ஆண்டின் நிதிசார்ந்த சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன்களை அமலாக்குவதற்கான சட்டத்தின் பிரிவு 13(2)ன் உட்பிரிவு (7)ன்படி கீழ் இதன் மூலம் உங்களுக்கு அறிவிக்க செய்கிறோம். மேற்படியில் கூறியபடி, நிதி அறிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் முதல் பாராவில் குறிப்பிடப்பட்டிருப்பது நீங்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. **48,89,887.29** **மற்றும்/அதற்கு மேலான தொகையை முழுமையாகச் செலுத்த வேண்டும் என்பதற்கு** மற்றும் உங்கள் கணக்கில் நிறுத்து ஏடுதலும் தொகை எடுத்திருந்தால் அதையும் சேர்த்து மேலும் இந்த கடன்களுக்கான முழுமையான தொகுதி உங்களது பொறுப்புகளை நிறைவேற்றுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறோம். மேற்குறித்த தொகையை செலுத்தும் நாள் வரையிலான வட்டியுடன் நீங்கள் செலுத்தத் தவறினால், மேற்குறிப்பட்ட சட்டத்தின் பிரிவு 13ன்கீ துணைப்பிரிவு (4)ன் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் அனைத்தையோ அல்லது வேறெந்த உரிமையையும் கையாளுவதற்கான உரிமை எங்களுக்கு உள்ளது என்பதையும் அறிவு கொள்ள வேண்டுகிறோம்.

6. மேற்குறிப்பிட்ட முதல் பாராவில் கட்டிக் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கடன் வசதிக்குமான வட்டித் தொகையும் நீங்கள் செலுத்த வேண்டிய முழுத் தொகையும் செலுத்தப்படும் காலம் வரை மொத்த தொகையின் மேற்கு கொண்டிருக்கும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுகிறோம்.

7. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 13வது பிரிவின் துணைப்பிரிவின் முதல் பாராவில் குறிப்பிட்டுள்ள கால்களுக்கான நினைவில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் என்பதையும் விற்பனை, குத்தகைக்கு விடுவோ அல்லது (வழக்கமான வர்த்தக வெல்பாடுகளைத் தவிர) வேறெந்த வகையிலும் பயன்படுத்துவதிலிருந்து நீங்கள் தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். மேற்கூறிய 13 (13) சட்டப்பிரிவுகளின் விதிமுறை களின்படி, இந்த சட்டத்தின் 29வது பிரிவின் கீழ் தண்டனைக்கு உரிய குற்றம் ஆகும் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

8. மேலும் இந்தச் சட்டத்தின் பிரிவு 13ன் துணைப்பிரிவு (8)ன் கீழ் நிந்தச் சொத்துக்களை பொது ஏலத்தில் விடோ/ ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரியோ / ஒப்பந்தம் விடோ / தனிப்பட்ட ஒப்பந்தம் போடோ பத்திரிக்கைகளில் அறிவிப்பு செய்யும் நாளுக்கு முன்பாக எப்போது வேண்டுமானாலும் எங்களுக்கு நீங்கள் செலுத்த வேண்டிய தொகையை, அனைத்து செலவுகள், கட்டணங்கள் ஆகியவற்றுடன் முழுமையாகச் செலுத்தி பிணையில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்டுக் கொள்ளலாம் என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். எனினும் மேற்குறிப்பிட்ட வகையில் பத்திரிக்கைகளில் அறிவிப்பு வெளியான பிறகு, பிணையில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்டுக் கொள்ளலாம் என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

9. இந்த கோரிக்கை அறிவிக்கையானது எங்களது தவறான நோக்கமும் இல்லாத வகையில், எங்களது வங்கிக்குச் சேர வேண்டிய தொகையைப் பெறுதற்காகவும், எங்களது வசமுள்ளபடியில், மேலும் கோரிக்கை எழுப்பவதற்கான உரிமை உள்ளிட்டு எங்களுக்கு இருக்கும் வேறெந்த உரிமைகள் அல்லது வழிகளை விட்டுக் கொடுப்பதாக கருதலாகாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

இடம்: கோயம்புத்தூர்: தேதி: 13.08.2026 அங்கீகாரம் பெற்ற அலுவலர் பாங்க் ஆஃப் பரோடா

HDB FINANCIAL SERVICES

HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்.

பதிவு அலுவலகம் : ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09.

கிளை அலுவலகம் : HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்., எண். 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி - 620003.

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய E-ஏலத்துக்கான ஏல விற்பனை அறிவிப்பு

(பெறுநர்: கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பரவலாக பொதுமக்கள்) (சர்:பாசி சட்டம் 2002, விதி 8(6) அதனுடன் விதி 9(1) ஆகியவற்றின் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி பின்வரும் சொத்தை கீழ்க்காணும் கடன் கணக்குகாக "உள்ளது உள்ள இடத்தில் & உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் சுவாதீனம் செய்துள்ளார்.

1. விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: 1. செல்வம் :.பைனான்ஸ், எண்: 92, பாளையம் பஜார், உறையூர், திருச்சி - 620003, தமிழ்நாடு; **இன்னொரு முகவரி** கதவு எண்: 19A, 8-வது குறுக்குத் தெரு, பள்ளத் தெரு, வடவூர், தில்லை நகர், திருச்சி, திருச்சி - 620018; மற்றும் **இன்னொரு முகவரி** எண்: 12/8, சுகதாஸ் மண்டி தெரு, பாபு சாலை, திருச்சி, திருச்சி - 620002. **2. M. கார்த்திகா,** எண்: 12/8, சுகதாஸ் மண்டி தெரு, பாபு சாலை, திருச்சி, திருச்சி - 620002, தமிழ்நாடு. **3. செல்வம் ஜூவல்லரி,** எண்: 92, பாளையம் பஜார், உறையூர், திருச்சி - 620003, தமிழ்நாடு. **4. S மதன்,** எண்: 12/8, சுகதாஸ் மண்டி தெரு, பாபு சாலை, தெப்பக்குளம், திருச்சி - 620002, தமிழ்நாடு. **5. S ஆனந்தன்,** எண்: 12/8, சுகதாஸ் மண்டி தெரு, பாபு சாலை, திருச்சி, திருச்சி - 620003, தமிழ்நாடு. **6. கீதா B.,** எண்: 12/8, சுகதாஸ் மண்டி தெரு, பாபு சாலை, திருச்சி, திருச்சி - 620002, தமிழ்நாடு.HO- 610001 தமிழ்நாடு. **2. கடன் கணக்கு எண்: 7012217.3 மொத்த நிலுவைத்தொகை: 18.08.2026 அன்றுள்ளபடி கடன் கணக்கு எண் 7012217-க்கு ரூ. 1,04,98,675.86** (ரூபாய் ஒரு கோடியே நான்கு லட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து மற்றும் எண்பத்தாறு பைசா ம